செய்தி வெளியீடு எண் : 22 நாள் :21.06.2021

**தேனி மாவட்டம்.**
**பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்களுக்கான**
**வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி)-ல் பெறப்பட்ட மனுக்கள் குறித்து,**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

******

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில், இன்று (21.06.2021) நடைபெற்ற பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்களுக்கான 1430-ம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி)-ல் பெறப்பட்ட மனுக்கள் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவுவதை தடுக்கும் பொருட்டு தமிழக அரசால் தமிழ்நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு, மக்கள் கூட்டமாக ஓரிடத்தில் கூடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால், 1430ஆம் பசலி (2020-2021) ஆண்டிற்கு வருவாய்த் தீர்வாயம் நடத்தி மக்களிடம் நேரிடையாக மனுக்களைப் பெற்றுக் கொள்ள இயலாத சூழ்நிலை தற்சமயம் ஏற்பட்டு உள்ளது. எனவே, இதனை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் தங்கள் மனுக்களை 31.07.2021 வரை இ-சேவை மையங்களின் மூலமாகவோ அல்லது http://gdp.tn.gov.in/jamabandhi என்ற இணையதளத்தின் மூலமாகவோ விண்ணப்பிக்குமாறு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, தேனி மாவட்டத்திலுள்ள தேனி, போடிநாயக்கனூர், ஆண்டிபட்டி, உத்தமபாளையம் மற்றும் பெரியகுளம் ஆகிய வட்டத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்களுக்கான 1430-ம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி)-யினை, பெரியகுளம் வட்டத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களாலும், ஆண்டிபட்டி வட்டத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களாலும், தேனி வட்டத்திற்கு சார் ஆட்சியர் (பெரியகுளம்) அவர்களாலும், உத்தமபாளையம் வட்டத்திற்கு உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களாலும், போடிநாயக்கனூர் வட்டத்திற்கு தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.), தேனி அவர்களாலும் வருகின்ற 30.07.2021 அன்று வரை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தின் மூலம் பொதுமக்களிடமிருந்து இ-சேவை மையங்களின் மூலமாகவோ அல்லது http://gdp.tn.gov.in/jamabandhi என்ற இணையதளத்தின் மூலமாகவோ பெறப்படும் கோரிக்கை மனுக்களை பரிசீலனை செய்து உடன் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், பொதுமக்களிடமிருந்து பட்டா மாறுதல், வீட்டுமனைப் பட்டாக்கள், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், பிறப்பு இறப்புச் சான்றிதழ், சாதிச்சான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ், வருமானச் சான்றிதழ், குடும்ப அட்டை, மாதாந்திர உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இயற்கை மரணம், விபத்து நிவாரணத்தொகை, நலிந்தோர் உதவித்தொகை, நிலம் சம்பந்தம் தொடர்பான இணையதளத்தின் மூலமாகவோ பெறப்படும் பல்வேறு கோரிக்கை மனுக்கள் மீது தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், பெரியகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்களுக்கான நடைபெற்ற 1430-ம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி)-ல் பொதுமக்களால் தற்சமயம் வரை 88 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. அதில் பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட கெங்குவார்பட்டி பிட்-1&2, தேவதானப்பட்டி பிட்-1&2, தே.வாடிப்பட்டி, சில்வார்பட்டி ஆகிய வருவாய் கிராமங்களைச் சேர்ந்த பொது மக்களிடமிருந்து இன்றைய தினம் 28 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி)-யில் பெறப்பட்ட மனுக்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டும், புதிதாக 30.07.2021 வரை பெறப்படும் மனுக்கள் மீதும் தனி கவனம் செலுத்தி, தகுதி வாய்ந்த மனுக்களுக்குரிய பயன்கள் உடன் வழங்கிட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், பெரியகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்க வருகைதந்திருந்த பொதுமக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்.

இந்நிகழ்வின் போது, உதவி இயக்குநர் (நில அளவை) இரா.ஜெயசந்திரன் அவர்கள், பெரியகுளம் வட்டாட்சியர் எம்.கிருஷ்ணகுமார், தனி வட்டாட்சியர், பெரியகுளம் (சமூக பாதுகாப்பு திட்டம்) இளங்கோ, கிராம நிர்வாக அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**